भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्रकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

*புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக*

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் சுட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1892 (2/1892), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (74/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

# ஆற்று வாரியங்கள் சட்டம், 1956

*(சட்ட எண் 49/1956)*[1]

[*1956, செப்டம்பர் 12*]

மாநிலங்களிடையே ஆறுகளை மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளை ஒழுங்குறுத்துவதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் ஆற்று வாரியங்களை நிறுவுவதற்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஏழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

## முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், ஆற்று வாரியங்கள் சட்டம், 1956 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு தொடக்கமும்

(2) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் [2]தேதியன்று செல்லாற்றல் பெறும்.

2. மைய அரசாங்கம், இதன் பின்பு இதில் வகைசெய்யப்பட்ட அளவுக்கு மாநிலங்களிடையேயான ஆறுகளை மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளை ஒழுங்குறுத்துதலையும் மேம்படுத்துதலையும் தன்னுடைய கட்டாளுகையின்கீழ் எடுத்துக்கொள்ளவேண்டியது, பொது நலனுக்கு உகந்தது என்று ஈங்கிதனால் விளம்புகை செய்யப்படுகிறது. மைய அரசாங்கத்தி கட்டாளுகையி உகந்தமை குறித்த விளம்புகை.

3. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்

(அ) "வாரியம்" என்பது, பிரிவு 4 இன்படி நிறுவப்பட்ட ஓர் ஆற்று வாரியம் என்று பொருள்படும்;

(ஆ) ஒரு வாரியம் தொடர்பாக, "உரித்தமுடைய அரசாங்கங்கள்" என்பது, மைய அரசாங்கத்தின் கருத்தில், இந்தச் சட்டத்தின்படி வாரியத்தின் செயற்பணிகளில் பெரும்பாலும் உரித்தமுடையவையாக அல்லது அவற்றால் பாதிக்கப்படுகிறவையாக இருக்கின்ற அந்த மாநிலங்களின் அரசாங்கங்கள் என்று பொருள்படும்;

(இ) "உறுப்பினர்" என்பது, ஒரு வாரியத்தின் உறுப்பினர் என்று பொருள்படும், மற்றும் அதனுடைய தலைவரை உள்ளடக்கும்;

(ஈ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

## ஆற்று வாரியங்களை நிறுவுதல்

4. (1) மைய அரசாங்கம், ஒரு மாநில அரசாங்கத்திடமிருந்து இதற்கென பெறப்பட்ட வேண்டுதலின்பேரில் அல்லது பிறவாறு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மாநிலங்களிடையேயான ஆறு அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கை அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட பகுதி எதையும் ஒழுங்குறுத்துதல் அல்லது மேம்படுத்துதல் குறித்த அத்தகைய பொருட்பாடுகள் வாரியங்களை நிறுவுதல்.

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக, 3–5–1955 இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 2ஐப் பார்க்கவும். மற்றும் கூட்டுக்குழுவின் அறிக்கைக்காக 21–11–1955 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 2, பக்கம் 617 ஐப் பார்க்கவும்.

2. இந்தச் சட்டம் 15–5–1957 அன்று செல்லாற்றல் பெற்றது, 1957, இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 1, பக்கம் 165 ஐப் பார்க்கவும்.

தொடர்பாக உரித்துமுடைய அரசாங்கங்களுக்கு அறிவுரையளிப்பதற்காக மற்றும் அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் பிற செயற்பணிகளைப் புரிவதற்காக ஓர் ஆற்று வாரியத்தை நிறுவலாம் மற்றும் வெவ்வேறு வாரியங்கள், வெவ்வேறு மாநிலங்களிடையேயான ஆறுகள் அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்காக நிறுவப்படலாம்:

வரம்புரையாக: வாரியத்தை நிறுவுதல், அதன் உறுப்பினர்களாக அமர்த்தப்படவேண்டியவர்கள், வாரியம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்படும் செயற்பணிகள் ஆகியவற்றுக்கான செயற்குறிப்புகளை பொறுத்த அறிவிக்கை எதுவும், அதில் உரித்துமுடைய அரசாங்கங்களை கலந்தாய்வு செய்தபின்பு தவிர, பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) ஒரு வாரியம் உட்பிரிவு (1) இன்படியான அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் பெயரில் நிறுவப்படலாம்.

(3) அவ்வாறு நிறுவப்பட்ட வாரியம் ஒவ்வொன்றும் தொடர்ந்த நிலைப்பாடும், தனியோர் இலச்சினையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டுருமக் குழுமமாக இருந்துவரும். மற்றும் சொல்லப்பட்ட பெயரில் அது வழக்கிடுதலும் அதன்மீது வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(4) வாரியம் ஒவ்வொன்றும், உட்பிரிவு (1) இன்படியான அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் (அதனுடைய கிளையாறுகள், எவையேனுமிருப்பின், அவை உள்ளடங்கலாக) ஆற்றின் அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கின் வரம்புகளுக்குள் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்துதல் வேண்டும், மற்றும் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட பரப்பிடம் வாரியத்தின் செயற்பாட்டுப் பரப்பிடமென வழங்கப்பெறுதல் வேண்டும்.

*வாரியத்தின் கூட்டமைப்பு.*

5. (1) வாரியம் ஒரு தலைவரையும், மைய அரசாங்கம் அமர்த்துவதற்குத் தக்கதெனக் கருதுகிற பிற உறுப்பினர்களையும் கொண்டதாக இருக்கும்.

(2) ஒரு நபர் மைய அரசாங்கத்தின் கருத்தின்படி அவர் நீர்ப்பாசனம், மின் பொறியியல், வெள்ளக் கட்டுப்பாடு, நீர்வழிப் போக்குவரத்து, நீர்ப் பாதுகாப்பு, மண்பாதுகாப்பு, நிருவாகம் ஆகியவற்றில் அல்லது நிதியில் சிறந்த தனியறிவும், பட்டறிவும் கொண்டிருந்தாலன்றி, ஓர் உறுப்பினராக அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்.

*உறுப்பினர்களின் பணி வரையறைகளும் வரைக்கட்டுகளும்*

6. (1) ஓர் உறுப்பினர், மைய அரசாங்கத்தால், அவருடைய அமர்த்துகை முன்னமேயே முடிவுறுத்தப்பட்டாலன்றி, அதிகாரமுறை அரசிதழில் மைய அரசாங்கத்தால் இதற்கென அறிவிக்கப்படலாகும் காலஅளவிற்கு பதவி வகிப்பார்; மற்றும் அவருடைய பதவிக்காலம் முடிவடைவதன்பேரில், மறு அமர்த்துகைக்கு தகுமையுடையவர் ஆவார்.

(2) ஓர் உறுப்பினர், மைய அரசாங்கத்திற்கு, தம் கைப்பட எழுத்து வடிவில் முகவரியிட்டு தமது பதவியை விட்டுவிலகலாம், ஆனால், அவர், தமக்குப் பின்வருநரின் அமர்த்துகை அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கப்படும் வரையில், பதவியில் தொடர்ந்திருந்து வருவார்.

(3) உட்பிரிவு (2) இன்படி ஓர் உறுப்பினரின் பதவி விலகலால் அல்லது ஏதேனும் பிற காரணத்தால் ஏற்பட்ட ஒரு தற்செயல் காலியிடம், புதிய அமர்த்துகையால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(4) ஓர் உறுப்பினர், மைய அரசாங்கம் தக்கதெனக் கருதுகிறவாறு, ஒரு முழுநேர உறுப்பினராகவோ அல்லது பகுதிநேர உறுப்பினராகவோ அமர்த்தப்படலாம்.

(5) தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் பணிவரையுரைகளும், வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருக்கும்.

*உறுப்பினர் எவரும் தற்காலிகமாக வராதிருத்தல்.*

7. உறுப்பினர் எவரும், தளர்ச்சியால் அல்லது பிறவாறு தம்முடைய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக திறனற்றவராக்கப்படுவாராயின், அல்லது தாம் அமர்த்தப்பட்ட பதவிக்கான விடுமுறையை

உள்ளடக்கி இராத சூழ்நிலைகளில் விடுப்பின்பேரில், அல்லது பிறவாறு வாராதிருப்பாராயின், மைய அரசாங்கம் அவருடைய இடத்தில் செயலுறுவதற்கு பிறிதொரு நபரை அமர்த்தலாம்.

வாரியத்தின் கூட்டங்கள்.

8. வாரியம், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகளால் வகைசெய்யப்படலாகும் நேரங்களிலும், இடங்களிலும் கூடுதல் வேண்டும், மற்றும் அதனுடைய கூட்டங்களில், அலுவல் நடவடிக்கை குறித்த நெறிமுறை விதிகளைக் கடைபிடித்தல் வேண்டும்.

வாரியத்திலுள்ள காலியிடம் முதலியவை, செயல்கள் அல்லது நடவடிக்கைகளை செல்லாநிலையதாக்குதல் ஆகாது.

9. வாரியத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் வாரியத்தில் காலியிடம் எதுவும் இருப்பதன் அல்லது அதன் உறுப்பினரின் அமர்த்துகையிலுள்ள ஏதேனும் குறைபாட்டின் காரணமாக மட்டுமே செல்லாநிலையதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

அறிவுரைக் குழுவை அமர்த்துதல்.

10. வாரியம், அவ்வப்போது, இந்தச் சட்டத்தின்படியான தன்னுடைய செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு, அதை இயல்விக்கும் நோக்கத்திற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவுரைக்குழு அல்லது குழுக்களை அமர்த்தலாம்.

குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வாரியத்துடன் நபர்கள் தற்காலிகமாக ஒன்று சேர்தல்.

11. (1) வாரியம், இந்தச் சட்டத்தின்படி தன்னுடைய செயற்பணிகளில் எதையும் புரிகையில், எந்த நபருடைய உதவியை அல்லது அறிவுரையை அது விரும்பலாகுமோ அந்த நபர் எவரும், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகளால் தீர்மானிக்கப்படலாகும் முறையிலும் நோக்கங்களுக்காகவும் அதனுடன் ஒன்று சேரலாம்.

(2) நோக்கம் எதற்காகவும் உட்பிரிவு (1) இன்படி வாரியத்துடன் ஒன்று சேர்ந்துள்ள ஒரு நபர் நோக்கம் தொடர்பான, வாரியத்தின் கலந்தாய்வு களில் பங்கெடுத்துக்கொள்வதற்கு உரிமையுடையவர் ஆவார். ஆனால், வாரியத்தின் ஒரு கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையுடையவர் ஆகார் மற்றும் பிற நோக்கம் எதற்காகவும் உறுப்பினராகமாட்டார்.

வாரியத்தின் பணியாளர் தொகுதி.

12. இதற்கென, மைய அரசாங்கத்தால் வகுக்கப்படலாகும் விதிகளுக்கு உட்பட்டு, வாரியம், இந்தச் சட்டத்தின்படி திறம்பட தன்னுடைய செயற்பணிகளைப் புரிவதற்கு அல்லது தன்னுடைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அதை இயல்விக்கும் நோக்கத்திற்காக, அது தக்கதெனக் கருதலாகும் அலுவலர்களை அமர்த்தலாம், மற்றும் அவர்களுடைய செயற்பணிகளையும், பணிவரையுரைகளையும் வரைக்கட்டுகளையும் தீர்மானிக்கலாம்.

## அத்தியாயம் III

## வாரியத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும்

எந்தப் பொருட்பாடுகளைப் பொறுத்து வாரியம் அறிவுரை கொடுப்பதற்கு அதிகாரமளிக்கப் படலாகுமோ அந்தப் பொருட்பாடுகள்

13. ஒரு வாரியம், பிரிவு 14 இன் உட்பிரிவு (1) இன்படி பின்வரும் செயற் பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் புரிவதற்கு அதிகாரமளிக்கப்படலாம், அவையாவன:—

(அ) செயற்பாட்டிலுள்ள தன்னுடைய பரப்பிடத்தினுள் குறித்துரைக்கப்பட்ட மாநிலங்களிடையேயான ஆறு அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கு எதையும் ஒழுங்குறுத்துதல் அல்லது மேம்படுத்துதல் தொடர்பான பொருட்பாடு எதிலும் உரித்தமுடைய அரசாங்கங்களுக்கு அறிவுரை கூறுதல் மற்றும் குறிப்பாக, அவற்றுக்கிடையேயான சச்சரவுகளை முடிவு

செய்வதன் பொருட்டு, அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது, மற்றும்,—

(i) மாநிலங்களுக்கிடையேயான ஆற்றின் நீர்மூலங்களைப் பாதுகாத்தல், கட்டாளுகை செய்தல் மற்றும் பெரிதும் உகந்தவாறு பயன்படுத்துதல்;

(ii) நீர்ப்பாசனம், நீர்வழங்கீடு அல்லது வடிகால்களுக்கான திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் செயற்படுத்துதல்;

(iii) நீர்மின்னாற்றலைப் பெருக்குவதற்கான திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் செயற்படுத்துதல்;

(iv) வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் செயற்படுத்துதல்;

(v) நீர்வழிப் போக்குவரத்தை ஊக்குவித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்;

(vi) காடுவளர்ப்பை ஊக்குவித்தல் மற்றும் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல்;

(vii) மாநிலங்களிடையேயான ஆற்றுநீர் மாசடைவதைத் தடுத்தல்;

(viii) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடுகள் பற்றிய நோக்கத்திற்காக மாநிலங்களிடையேயான ஆற்றில் அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கில் அவைகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பொறுத்து உச்சஅளவு விளைவுகளை எய்தப் பெறுவது தொடர்பாக அவற்றுக்கு அறிவுரை கூறுதல்;

(ஆ) மாநிலங்களிடையேயான ஆற்றை அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கை ஒழுங்குறுத்தும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக பல்நோக்குத் திட்டங்கள் உள்ளடங்கலாக, திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு உரித்தமுடைய அரசாங்கங்களுக்கு அறிவுரை கூறுதல்;

(இ) வாரியத்தால் தயாரிக்கப்பட்ட திட்டம் எதனையும் நிறைவேற்றுவதற்கான மற்றும் திட்டத்தை நிறைவேற்றுகையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் எவற்றையும் பேணிவருவதற்கான செலவுகளை உரித்தமுடைய அரசாங்கங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்;

(ஈ) உரித்தமுடைய அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வளர்ச்சியைக் கண்காணித்தல்;

(உ) மேலே கண்ட செயற்பணிகளில் எதற்கும் துணைவுறு, சார்வுறு அல்லது விளைவுறுவான பிற பொருட்பாடு எதுவும்.

14. (1) மைய அரசாங்கம், உரித்தமுடைய அரசாங்கங்களைக் கலந்தறிந்த பின்பு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும், பிரிவு 13 இன்படியான, செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் புரிவதற்கு வாரியத்திற்கு அதிகாரமளிக்கலாம். வாரியத்தின் செயற்பணிகள்.

(2) வாரியம், செயற்பாட்டிலுள்ள தன்னுடைய பரப்பிடத்தினுள் இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ தன்னுடைய எந்த அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் எந்தச் செயற்பணிகளைப் புரிவதற்கும் அதிகாரமளிக்கப்படுகிறதோ அந்த அதிகாரங்களைச் செலுத்துதலும் அந்தச் செயற்பணிகள் அனைத்தையும் புரிதலும் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி தன்னுடைய செயற்பணிகளைப் புரிகையில், வாரியம், அனைத்துக் கட்டங்களிலும் உரித்தமுடைய அரசாங்கங்களிடம் கலந்தாய்வு செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய அரசாங்கங்களுக்கிடையே, நடைமுறைக்கு இயன்ற அளவுக்கு உடன்பாட்டைப் பெறுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

வாரியம் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் நிறைவேற்றுகை.

15. (1) வாரியம் எதுவும், பிரிவு 13 இன் கூறு (ஆ) வின்படியான செயற்பணிகளைப் புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, வாரியம் அவ்வப்போது, செயற்பாட்டிலுள்ள தன்னுடைய பரப்பிடத்தினுள் மாநிலங்களிடையேயான ஆறு அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கு எதையும் ஒழுங்குறுத்தும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின்படியான தன்னுடைய செயற்பணிகளுக்கு ஒவ்வாததாக இராத திட்டங்களைத் தயாரிக்கலாம்.

(2) வாரியம் அத்தகைய திட்டம் எதையும் தயாரித்த பின்பு, அந்தத் திட்டம் பொறுத்து உரித்தமுடைய அரசாங்கங்களுடனும் மைய அரசாங்கத்துடனும் கலந்தாய்வு செய்தல் வேண்டும்; மற்றும் அவற்றினுடைய தூண்டுரைகள், எவையேனுமிருப்பின், அவற்றை வாரியம் ஓர்வு செய்த பின்பு, திட்டத்தை உறுதி செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது ஏற்க மறுக்கலாம்.

(3) உட்பிரிவு (2) இன்படி உறுதி செய்யப்பட்டவாறான அல்லது மாற்றமைவு செய்யப்பட்டவாறான திட்டம், அதன்பேரில் அறுதியானது ஆதல் வேண்டும் மற்றும் ஒப்பேற்பளிக்கப்பட்ட திட்டம் என்று வழங்கப்பெறுதல் வேண்டும்.

(4) திட்டம் எதுவும் ஒப்பேற்பளிக்கப்படுவதற்கு முன், வாரியம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கையில் மற்றும் திட்டத்தை நிறைவேற்றுகையில், மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் எவற்றையும் பேணிவருகையில் பெரும்பாலும் செய்ய நேர்ந்த செலவுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அந்தச் செலவுகள், அவற்றால் திட்டத்திலிருந்து பெறப்படும் நலன்களைக் கவனத்திற்கொண்டு வாரியத்தால் உடன்படலாகும் அல்லது உடன்படத்தவறுகையில் அதனால் தீர்மானிக்கப்படலாகிற விகிதத்தில் உரித்தமுடைய அரசாங்கங்களுக் கிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஒப்பேற்பளிக்கப்பட்ட திட்டம் ஒவ்வொன்றும், உரித்தமுடைய அரசாங்கங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் வாரியம், திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவற்றுக்கு அறிவுரை கூறலாம், மற்றும் ஒப்பேற்பளிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு படி மைய அரசாங்கத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(6) மைய அரசாங்கம், உரித்தமுடைய அரசாங்கம் எதனிடமிருந்தும் இதற்கெனப் பெறப்பட்ட வேண்டுதலின் பேரில், அல்லது பிறவாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையாகலாகும் நடவடிக்கைகளை எடுக்கையில் உரித்தமுடைய அரசாங்கங்களுக்கு உதவி செய்யலாம்.

வாரியத்தின் பொதுவான அதிகாரங்கள்.

16. வாரியம் ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின்படியான தன்னுடைய செயற்பணிகளைத் திறம்படப் புரியும் நோக்கத்திற்காக செயற்பாட்டிலுள்ள தன்னுடைய பரப்பிடத்தினுள்,—

(அ) அசைவியல் மற்றும் நிலையியல் இரண்டிலுமான, அது தேவையெனக் கருதும் சொத்தினைக் கையகப்படுத்தலாம், கைக்கொள்ளலாம் அவற்றுக்கு வகைசெய்யலாம்;

(ஆ) அது தேவையெனக் கருதும் முதல்நிலை புலனாய்வினை அல்லது நில அளவைகளை அல்லது பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்;

(இ) மாநிலங்களிடையேயான ஆற்றை அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கை ஒழுங்குறுத்துதல் அல்லது மேம்படுத்துதல்

தொடர்பாக உரித்தமுடைய அரசாங்கம் எதனாலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் எவற்றையும் ஆய்வு செய்யலாம் அல்லது ஆய்வு செய்யப்படுமாறு செய்யலாம்;

(ஈ) நீர்மின் உற்பத்தி, நீர்ப்பாசனம், நீர்வழிப் போக்குவரத்து, வெள்ளக் கட்டுப்பாடு, மண் பாதுகாப்பு, நிலப் பயன்பாடு மற்றும் அது தொடர்பான கட்டுமான மற்றும் வடிவமைப்புக் கூறுகள் போன்று, நீர்மூலங்களைப் பாதுகாத்தல், ஒழுங்குறுத்துதல் அல்லது பயன்படுத்துதல் பற்றிய பல்வேறு பண்புக்கூறுகளின் ஆராய்ச்சியை நடத்தலாம், மற்றும் ஒருங்கிணைக்கலாம்;

(உ) அது தேவையெனக் கருதும் இடவியல்பு சார்ந்த வானிலை ஆராய்ச்சிக்குரிய, நீரின் பண்பியல் ஆய்வுக்குரிய மற்றும் நிலத்தடி நீர் பற்றிய விவரக்குறிப்பைத் திரட்டலாம்;

(ஊ) மாநிலங்களுக்கிடையேயான ஆற்றை, அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கை ஒழுங்குறுத்துதல் அல்லது அதன் மேம்பாட்டில் பல்வேறு பண்புக் கூறுகள் தொடர்பான புள்ளிவிவரத்தை அல்லது பிற தகவலை வெளியிடலாம்;

(எ) வாரியம், உரித்தமுடைய அரசாங்கம் எதையும்,—

(i) மாநிலங்களிடையேயான ஆற்றை அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கை ஒழுங்குறுத்துவதற்காக அல்லது அதன் மேம்பாட்டிற்காக அந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்,

(ii) இடவியல்பு சார்ந்த வானிலை ஆராய்ச்சிக்குரிய, நீரின் பண்பியல் ஆய்வுக்குரிய மற்றும் நிலத்தடி பற்றிய விவரக் குறிப்பு,

(iii) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடுகள்,

தொடர்பான தகவலை அளிக்குமாறு கோரலாம்.

*வாரியத்திற்கு தொகை அளித்தல்.*

17. மைய அரசாங்கம், இதற்கென நாடாளுமன்றத்தால் சட்டத்தின் வாயிலாகச் செய்யப்பட்ட உரிய ஒதுக்கீட்டிற்குப் பின்பு, இந்தச் சட்டத்தின்படி, வாரியத்தின் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு மைய அரசாங்கம் தேவையென ஓர்வு செய்யலாகும் தொகைகளை ஒவ்வொரு நிதியாண்டிலும் வாரியத்திற்கு அளிக்கலாம்.

*வாரியத்தின் நிதியம்.*

18. (1) வாரியம், தன்னுடைய சொந்த நிதியத்தை உடையது ஆகும் மற்றும் மைய அரசாங்கத்தால் அல்லது ஒரு மாநில அரசாங்கத்தால், அவ்வப்போது அதற்கு அளிக்கப்படலாகும் தொகைகள் அனைத்தையும் மற்றும் வாரியத்தின் பிற வரவுகள் அனைத்தும், வாரியத்தின் நிதியத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும், மற்றும் வாரியத்தால் செய்யப்படும் செலுத்தங்கள் அனைத்தும் அதிலிருந்து செய்யப்படுதல் வேண்டும்.

(2) வாரியம், இந்தச் சட்டத்தின்படி தன்னுடைய செயற்பணிகளைப் புரிவதற்கு பொருத்தமெனக் கருதுகிற தொகைகளைச் செலவு செய்யலாம், மற்றும் அத்தகைய தொகைகள் வாரியத்தின் நிதியிலிருந்து செலுத்தத்தக்க செலவினமாகப் பாவிக்கப்படுதல் வேண்டும்.

*வரவு–செலவுத் திட்டம்.*

19. வாரியம், மதிப்பீடு செய்யப்பட்ட வரவுகள் மற்றும் செலவினத்தைக் காட்டும் அடுத்துவரும் நிதியாண்டு பொறுத்த ஒரு வரவு–செலவுத் திட்டத்தை ஒவ்வோர் ஆண்டும் வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும், காலத்திலும் தயாரித்தல் வேண்டும், மற்றும் அதன் படிகள் மைய அரசாங்கத்திற்கும், உரித்தமுடைய அரசாங்கங்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

*ஆண்டு அறிக்கை.*

20. வாரியம், முந்திய ஆண்டின்போது, தன்னுடைய நடவடிக்கைகளின் உண்மையான மற்றும் முழுமையான விவரங்களை அளிக்கும் ஓர் ஆண்டு அறிக்கையை ஒவ்வோர் ஆண்டும், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும்,

காலத்திலும் தயாரித்தல் வேண்டும், மற்றும் அதன் படிகள் மைய அரசாங்கத்திற்கும் உரித்தமுடைய மாநில அரசாங்கங்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும், மற்றும் மைய அரசாங்கம் அத்தகைய ஒவ்வொர் அறிக்கையையும் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

21. (1) வாரியம், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும், முறையிலும், தன்னுடைய கணக்குப் புத்தகங்களையும், அதன் கணக்குகள் தொடர்பான பிற புத்தகங்களையும் வைத்து வரப்படுமாறு செய்வித்தல் வேண்டும். கணக்குகள் மற்றும் தணிக்கை.

(2) வாரியத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படலாகிற காலத்திலும், முறையிலும் தணிக்கைசெய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IV அ

22. (1) (அ) இந்தச் சட்டத்தின்படி வாரியத்தால் கொடுக்கப்பட்ட அறிவுரை எதுவும்,— பொதுவர் தீர்ப்பு.

(அ) வாரியத்தால் கொடுக்கப்பட்ட அறிவுரை எதனையும் ஒட்டி உரித்தமுடைய அரசாங்கம் எதனாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவையும்,

(இ) வாரியத்தால் கொடுக்கப்பட்ட அறிவுரை எதையும் ஒட்டி நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்வதற்கு ஏதேனும் உரித்தமுடைய அரசாங்கத்தின் மறுப்பு அல்லது புறக்கணிப்பு,

(ஈ) வாரியத்தால் கொடுக்கப்பட்ட அறிவுரை எதிலிருந்து எழும் நலன்கள் அல்லது நிதிக் கடப்பாடுகளைப் பகிர்ந்து கொள்ளுதல்,

(உ) இந்தச் சட்டத்தால் உள்ளடக்கப்பட்ட அல்லது அது தொடர்பான அல்லது அதிலிருந்து எழும் பிற பொருட்பாடு எதுவும்

பொறுத்த இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட உரித்தமுடைய அரசாங்கங்களுக்கிடையே பூசல் அல்லது வேறுபாடு எதுவும் எழுகிறவிடத்து, உரித்தமுடைய அரசாங்கங்களில் எதுவும், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும், முறையிலும் பூசலிலுள்ள பொருட்பாட்டை பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டியனுப்பலாம்.

(2) பொதுவர், உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்கின்ற அல்லது இருந்துள்ள அல்லது உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக இருக்கின்ற நபர்களுக்கிடையேயிருந்து, இந்தியாவின் தலைமை நீதிபதியால் இதற்கென அமர்த்தப்பட வேண்டிய ஒரு நபராக இருப்பார்.

(3) பொதுவர், தம் முன்புள்ள நடவடிக்கையில் தமக்கு உதவுவதற்கு தரப்பினர்களைக் கட்டுப்படுத்துதலும் வேண்டும், மற்றும் அவர்களால் செல் திறமளிக்கப்படுதலும் வேண்டும்.

(5) பொதுவர் தீர்ப்பு சட்டம், 1940 இல் உள்ள எதுவும், இந்தப் பிரிவின்படியான பொதுவர் தீர்ப்புகளுக்குப் பொருந்தும்.

23. வாரியம், மைய அரசாங்கத்திற்கு, தன்னுடைய நிதியம் அல்லது நடவடிக்கைகள் பொறுத்து, மைய அரசாங்கம் அவ்வப்போது வேண்டுறுத்தலாகிற விவர அறிக்கைகள், புள்ளி விவரங்கள், கணக்குகள் மற்றும் பிற தகவலை அளித்தல் வேண்டும். விவர அறிக்கைகளும் அறிக்கைகளும்.

24. வாரியம், வாரியத்தின் தலைவர் அல்லது எவரேனும் பிற உறுப்பினர் அல்லது எவரேனும் அலுவலருக்கு, ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகள் மற்றும் வரம்புகள், எவையேனுமிருப்பின், அவற்றுக்கு உட்பட்டு, வாரியத்தின் அன்றாட நிருவாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு, அது தேவையெனக் கருதலாகும் இந்தச் சட்டத்தின்படியான தன்னுடைய அதிகாரங்களையும் செயற்பணிகளையும் எழுத்து வடிவிலான பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக ஒப்படைவு செய்யலாம். அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

*வாரியத்தின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் பொதுப் பணியாளர்கள் ஆவர்.*

25. வாரியத்தின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரும், இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதனையும் ஒட்டிச் செயலுறும்போது அல்லது செயலுறுவதாகப் புலப்படும்போது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21இன் பொருளின்படி பொதுப்பணியாளர்களாகக் கொள்ளப்படுவர்.

*நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.*

26. இந்தச் சட்டத்தினை ஒட்டி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் ஒரு வாரியத்தின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

*வாரியத்தைக் கலைத்தல் மற்றும் சொத்திருப்புகளையும் கடப்பாடுகளையும் உரிமைமாற்றம் செய்தல்.*

27. (1) வாரியம், இந்தச் சட்டத்தின்படியான தன்னுடைய செயற்பணிகளைப் புரிந்துள்ளது என்று மைய அரசாங்கம் கருதுகிறபோது, மைய அரசாங்கம், உரித்தமுடைய அரசாங்கங்களுடன் கலந்தாய்வு செய்த பின்பு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் இதற்கெனக் குறித்துரைக்கப்படலாகும் தேதியிலிருந்து வாரியம் கலைக்கப்படுதல் வேண்டுமென்று விளம்புகை செய்யலாம், மற்றும் வாரியம் அவ்வாறே கலைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன்படியான ஓர் அறிவிக்கை வாயிலாக வாரியம் கலைக்கப்படுவதன் பேரில்,—

(அ) வாரியத்திடம் உற்றமைந்திருக்கிற அல்லது அதனால் தண்டல் செய்யத்தக்க, சொத்துக்கள், நிதியங்கள் மற்றும் கொடுபட வேண்டியவை அனைத்தும் சொல்லப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் அரசாங்கம் அல்லது அதிகாரியிடம் உற்றமைதலும் அவரால் தண்டல் செய்யத்தக்கதாக இருத்தலும் வேண்டும்; மற்றும்

(ஆ) வாரியத்திற்கு எதிராகச் செயலுறுத்தத்தக்க கடப்பாடுகள் அனைத்தும், சொல்லப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கம் அல்லது அதிகாரிக்கு எதிராக மட்டுமே செயலுறுத்தத்தக்கது ஆகும்.

*விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.*

28. (1) மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, விதிகளை[1] வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:—

(அ) வாரியத்து உறுப்பினர்களின் வரையூதியங்கள், படித் தொகைகள் மற்றும் பணி வரைக்கட்டுகள்;

(ஆ) பிரிவு 13இன் கூறு (அ)வின் உட்கூறு (viii) இன்படி உரித்தமுடைய அரசாங்கங்களுக்கு எந்தப் பொருட்பாடுகள் பொறுத்து வாரியம் அறிவுரை கொடுக்கலாகுமோ அந்தப் பொருட்பாடுகள்;

(இ) எந்தப் பொருட்பாடுகள் பொறுத்து தகவல் கொடுப்பதற்கு வாரியம் உரித்தமுடைய அரசாங்கத்தை வேண்டுறுத்தலாமோ அந்தப் பொருட்பாடுகள்;

(ஈ) எந்த முறையில் மைய அரசாங்கம் வாரியத்தால் தயாரிக்கப்படும் திட்டம் எதையும் நிறைவேற்றுவதற்கு உரித்தமுடைய அரசாங்கங்களுக்கு உதவியளிக்கலாகுமோ அந்த முறை;—

---

1. ஆற்றுவாரிய விதிகள், 1958க்கான 13—9—1958 இந்திய அரசிதழின் பகுதி II பிரிவு 3(i), பக்கம் 718—ல் வெளியிடப்பட்ட ஜி.எஸ்.ஆர்.(G.S.R.) 813 ஐப் பார்க்கவும்.

(உ) வாரியத்தின் வரவு செலவு திட்டம் மற்றும் ஆண்டு அறிக்கை எந்தப் படிவத்தில் மற்றும் எந்தக் காலத்திற்குள் தயாரிக்கப்பட்டலாகுமோ மற்றும் மைய அரசாங்கத்திற்கும் உரித்துமுடைய அரசாங்கங்களுக்கும் அனுப்பப்படலாகுமோ அந்தப் படிவம் மற்றும் காலம்;

(ஊ) வாரியத்தின் கணக்குகள் வைத்து வரப்படலாகும் படிவமும் முறையும் மற்றும் அத்தகைய கணக்குகள் தணிக்கை செய்யப்படலாகும் காலமும் முறையும்;

(எ) வாரியம் மைய அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்கு வேண்டுறுத்தப்படலாகும் விவர அறிக்கைகள் மற்றும் தகவல்;

(ஏ) ஒரு பூசல் இந்தச் சட்டத்தின்படி பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டியனுப்பப்படலாகும் படிவம் மற்றும் முறை;

(ஐ) இந்தச் சட்டத்தின்படியான பொதுவர் தீர்ப்பு நடவடிக்கைகளில் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறை;

(ஒ) ஒரு வாரியத்தின் அலுவலர்களுக்காக ஆளெடுக்கும் முறை மற்றும் அத்தகைய அலுவலர்களின் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(ஓ) வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தப் பிரிவின்படி வகுக்கப்பட்ட விதிகள் அனைத்தும், அவை வகுக்கப்பட்ட பின்பு, நடைமுறையில் கூடுமான விரைவில், நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

29. வாரியம், மைய அரசாங்கத்தின் முன்ஒப்பேற்புடன் இந்திய அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கு ஒவ்வுதலாக இராத— ஒழுங்குறுத்தும் விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

(அ) வாரியத்தின் கூட்டங்களை மற்றும் அதில் அலுவல் நடத்துவதற்கான நெறிமுறையை ஒழுங்குறுத்துகின்ற,

(ஆ) அறிவுரைக்குழுக்கள் அமர்த்தப்படலாகும் முறை மற்றும் நோக்கங்களை ஒழுங்குறுத்துகின்ற,

(இ) பிரிவு II இன்படி வாரியத்துடன் நபர்கள் ஒன்று சேரலாகும் முறை மற்றும் நோக்கங்களை ஒழுங்குறுத்துகின்ற,

(ஈ) அறிவுரைக் குழுக்களின் உறுப்பினர்களின், பிரிவு II இன்படி வாரியத்துடன் ஒன்று சேர்ந்துள்ள நபர்களின் மற்றும் வாரியத்தால் அமர்த்தப்பட்ட அலுவலர்கள் அனைவரின் பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளைத் தீர்மானிக்கின்ற ஒழுங்குறுத்தும் விதிகளை வகுக்கலாம்.

———

53/19.